**சுருக்கம்**

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – மாற்றுத்திறனாளிகளுக்கு பதவி உயர்வில் 4% இட ஒதுக்கீடு வழங்குதல் – உயர்மட்டக்குழு அமைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நல(மாதிந–3.2)த் துறை**

அரசாணை (நிலை) எண்: 33

நாள்: 15.12.2022
சுபகிருது, கார்த்திகை 29,
திருவள்ளுவர் ஆண்டு,2053

படிக்கப்பட்டது:

1. ஒன்றிய அரசு குறிப்பாணை எண்.36012/2022–Estt(Res–II), நாள்.17.05.2022
2. அரசாணை (நிலை) எண்.29, மாற்றுத்திறனாளிகள் நல(மாதிந–3.2)த் துறை, நாள்.03.11.2022.

********

**ஆணை:–**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட குறிப்பாணையில், அரசு பணியிலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு பதவி உயர்வில் 4% இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து ஒன்றிய அரசால் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாற்றுத்திறனாளிகளுக்கு அரசுப்பணி பதவி உயர்வில் 4 % இட ஒதுக்கீடு வழங்குதல் குறித்த துணைக்குழு ஏற்படுத்தப்பட்டு, அரசுப் பணிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பதவி உயர்வில் 4% இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து துணைக்குழுவினரால் நிறைவேற்றப்படும் அறிக்கையில் கொணரப்படும் கருத்துக்களின் மீது கூர்ந்தாய்வு செய்ய ஏதுவாக உயர்மட்டக் குழு அமைப்பது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேற்காணும் ஆணைக்கிணங்க, அரசுப் பணியிலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு பதவி உயர்வில் 4% இட ஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக அமைக்கப்பட்ட துணைக் குழுவின் அறிக்கையின் மீது கூர்ந்தாய்வு செய்து உரிய பரிந்துரைகளை வழங்க ஏதுவாக, கீழ்க்கண்டவாறு உயர்மட்டக் குழுவினை அமைத்து அரசு ஆணையிடுகிறது:–

| | | |
|---|---|---|
| 1. | அரசு செயலாளர்,<br>மனித வள மேலாண்மைத் துறை | தலைவர் |
| 2. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளரால் பரிந்துரைக்கப்படும் துறை பிரதிநிதி,<br>நிதித் துறை | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 3. | அரசு செயலாளர்,<br>மாற்றுத்திறனாளிகள் நலத் துறை | உறுப்பினர் |
| 4. | செயலாளர் (சட்ட விவகாரங்கள்),<br>சட்டத் துறை | உறுப்பினர் |
| 5 | மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் | உறுப்பினர் செயலர் /<br>கூட்டுநர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. ஆனந்தகுமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 09.
அரசு செயலாளர், மனித வள மேலாண்மைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை –09,
செயலாளர், சட்டத் துறை, தலைமைச் செயலகம், சென்னை –09.
மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர், சென்னை –05.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 09
அனைத்துத் துறைகள், தலைமைச் செயலகம், சென்னை – 09.
செயலாளரின் தனிச் செயலர், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 09.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 03.
உதிரி / இருப்புக் கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 15/12/22
15/12/2022